# *உள்ளடக்கம்*


நிறுவக தகவல்கள்........................................ 01

தலைவியின் செய்தி........................................ 02

நிருவாக நம்பிக்கை பொறுப்பாளரின் மீளாய்வு........................................ 03

தொலைநோக்கு செயற்பணி குறிக்கோள்........................................ 04

1 2013**ஆம் ஆண்டு நிதியத்தின் செயற்பாடுகள்........................................ 05**

1.1 பதவிக்கேற்ப பயனாளிகள்........................................ 05

1.2 கடன் விநியோகப் படிமுறையும் முன்னேற்றமும்........................................ 07

1.3 விநியோகிக்கப்பட்ட கடன் எல்லைகளும் கடன்களின் பெறுமதியும்........................................ 08

1.4 கடன் அறவீட்டு முன்னேற்றம்........................................ 08

1.5 செயற்படாத கடன்களின் முகாமைத்துவம்........................................09

1.6 லோஹோர் சீமாட்டி கடன் நிதியத்திற்குரிய அலுவலகத் கட்டடத் தொகுதி........................................ 11

1.6.1வாடகை வருமானம்........................................ 11

1.6.2நிதியத்தின் ஸ்தீரத்தன்மை........................................ 11

1.6.3 தொழிற்பாட்டு வருமானம்........................................ 12

1.7 வசதியளிப்பவராக (Facilitator) நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்........................................ 12

1.8 தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சித்திட்டம் – 2013........................................ 12

02. **நிதியத்தின் பின்புலம்........................................** 13

2.1 பொறுப்புச் சபை ........................................ 13

2.2 அட்டவணை 11 - 2013 ஆம் ஆண்டில் நிதியத்தின் பதவியணி........................................ 13

2.3 நிர்வாகக் கட்டமைப்பு........................................ 14

03. **பொது நிர்வாக மனிதவள அபிவிருத்தியும்**........................................ 15

3.1. புதிய ஆட்சேர்ப்புகள்........................................ 15

3.2 பதவி உயர்வுகள்........................................ 15

3.3 அலுவலகப் பணியாளர்களின் நலன்புரிச் சேவைகள்ஃநட்புறவுச் சுற்றுலாக்கள்........ 15

3.4 பணியாளர்கள்........................................ 15

3.5 நிதியத்தின் கணனி முறைமையை மேம்படுத்தல்........................................ 15

3.6 உபயோகிக்கமுடியாத கழிக்கப்பட்ட பொருட்களைக் கைதவிர்த்தல்........................................ 15

3.7 பதிவுக் காப்பகத்தை நவீனமயப்படுத்தல்........................................ 16

3.8 கட்டடம் வளவுகளை மேற்பார்த்தல்........................................ 16

3.9 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு........................................ 16

04. **எதிர்காலத் திட்டங்கள........................................ 16**

05. **லோஉறார் சீமாட்டி கடன் நிதியத்தின் சுதந்திர கணக்காய்வு அறிக்கை........................................ 17**

06. **வருவாய்க் கூற்று........................................ 18**

07. **ஐந்தொகை........................................ 19**

08. **நிதிப். பாய்ச்சல் கூற்று........................................** 20

09. **நிதிப் பாய்ச்சல் கூற்றுக்கான குறிப்புகள்........................................ 21-28**

10. **வரி விதிப்பு........................................ 29**

# *நிறுவகத் தகவல்கள்*

## நிறுவகத்தின் பெயரும் முகவரியும்

- லோஹோர் சீமாட்டி கடன் நிதியம்
- 100, 3/2 சேர் சிற்றம்பலம் ஏ காடினர் மாவத்தை - கொழும்பு 02.

## பதிவு

- 1951ஆம் ஆண்டு லோஹோர் கடன் நிதியப் பொறுப்புச் சபைச் சட்டத்தின் (1953 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட) கீழ் நிறுவப்பட்டதும் நிதித் திட்டமிடல் அமைச்சின் கீழ் செயற்படும் நியதிச்சட்ட நிறுவனமுமாகும்.

## நம்பிக்கைப் பொறுப்புச் சபை:

- செல்வி சீதா குமாரி விமலவீர - தலைவி, (மேலதிக பணிப்பாளர் நாயகம் தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்
- திரு நிமல் அபேசிறி - நிருவாக நம்பிக்கைப் பொறுப்பாளர்
- திரு. டபில்யூ.ஏ.டி.ஏ.ஆர் குணவர்த்தன - உறுப்பினர்
- திரு கே.ஜி. சோமசுந்தர - உறுப்பினர்
- திரு கே.ஜே.பி.ஏ. திசாநாயக்க - உறுப்பினர்

## கணக்காய்வுக் குழு:

- திரு டி.என். ஒஷன் - தலைவர் - பணிப்பாளர் - அரச நிதித் திணைக்களம்
- திரு. டபில்யூ.ஏ.டி.ஏ.ஆர் குணவர்த்தன - உறுப்பினர்
- திரு. கே.ஜி. சோமசுந்தர - உறுப்பினர்
- திரு கே.ஜே.பி.ஏ. திசாநாயக்க - உறுப்பினர்

**கணக்காய்வு** : குணசேகர ரத்நாயக்க அன்ட் கம்பனி
(பட்டயக் கணக்காளர்)
65/3 சேர் சிற்றம்பலம் ஏ காடினர் மாவத்தை
கொழும்பு 02

**சேவை பெறப்படும் வங்கி** : மக்கள் வங்கி
தலைமை அலுவலகம்
கொழும்பு 02

## *தலைவியின் செய்தி*

லோஹோர் சீமாட்டி கடன் நிதியத்தின் 2013 ஆம் ஆண்டுக்கான ஆண்டு அறிக்கையை சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். நாம் வெற்றிகரமாகச் செயலாற்றி பயனாளிகட்கு சேவையளிக்கக்கூடிய வலுவாதாரமுள்ள நிறுவகம் என்ற நிலைப்பாடு இவ் ஆண்டில் எமது செயற்திறன் மூலம் உறுதாகியுள்ளது. 2013 ஆம் ஆண்டில் 5005 பயனாளிகட்கு 194 மில்லியன் ரூபா குறுகிய கால கடன்களை லோஹோர் சீமாட்டி கடன் நிதியத்தால் அளிக்கக்கூடியதாக இருந்தது. 2012 ஆம் ஆன்டின் செயற்றிறனுடன் ஒப்பிடும் போது 2013 ஆம் ஆண்டின் செயற்றிறன் திருப்திகரமாக உள்ளது.

பல பத்தாண்டுக் காலங்களாக செயலற்றுக் கிடந்த கடன்களை அறவிடுவதற்கு விசேட முயற்சிகளைச் செயற்படுத்துவதிலேயே 2011-2013 ஆண்டுக் காலத்தில் முகாமை முக்கியத்துவம் செலுத்தியது. இச்சாதனை வெற்றிபடைத்தது. அரச வியாபார முயற்சிகள் செயற்குழுவின் (ஊழீநு) விதப்புரைகளை இவ்விடயத்தில் எம்மால் நிறைவேற்ற முடிந்தது.

நிதியத்தின் மனிதவளங்கள், நிதி நிலைப்பாடு, பயனாளி நம்பிக்கை ஆகியவற்றில் நிதியத்தின் ஆற்றலை வலுப்படுத்துவதற்கு நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையினால் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பயனாளிக்குக் கடன் ஏற்பாடுகள் செய்த பின்னர் கிடைக்கக்கூடியதாயிருந்த நிதி நிலையான வைப்புக்களில் இடப்பட்டன. ஊழியர்கட்கு கடன் வசதிகளும், பயிற்சியும், இதர நலன்புரி வசதிகளும் அளிக்கப்பட்டன. கட்டடங்களின் நிலையை உயர்த்தி அலுவலக சூழல் மேம்படுத்தப்பட்டது.

மற்றுமொரு சிறந்த, ஆண்டின் இறுதியை எய்தும் போது, எனக்ளித்த செயலூக்கத்திற்கான பணிப்புகட்கும் வழிகாட்டலுக்கும் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைக்கு நன்றி பாராட்டுகிறேன். எவ்வேளையிலும் அர்ப்பணிப்புடனும், உள்ளார்ந்த ஈடுபாட்டுடனும் கடின உழைப்பை நல்கிய பணியாளர் உறுப்பினர்கட்கு மனப்பூர்வமாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நிலைத்து நிற்ககக்கூடிய ஒரு நிதியைப் பேணுவதற்கு உதவுகின்ற பயனாளிகட்கும், வாடிக்கையாளர்கட்கும் நான் நன்றியுடையேன்.

**தலைவி**
**லோஹோர் சீமாட்டி கடன் நிதியம்**

# *நிர்வாகப் பொறுப்பாளரின் செய்தி*

ஸ்கொட்லண்ட் இனத்தைச் சேர்ந்த சீமாட்டிஜுன் லோஹோர் அவர்களின் தனிப்பட்ட செல்வத்தில் இருந்து வழங்கப்பட்ட நன்கொடை மற்றும் அக்காலத்தில் தர்ம ஆணையாளராக இருந்த அருட் தந்தை நதானியல் அவர்களின் தலைமையின் கீழ் 1927ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட லோஹோர் சீமாட்டிகடன் நிதியம் அன்றிலிருந்து அரசு மற்றும் ஏனைய நன்கொடையாளர்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற நன்கொடைகளில் இருந்து வளர்ச்சியடைந்து 80 ஆண்டுகள் வெற்றிகரமாக செயற்பட்டுவருகின்றது. ஆரம்பத்தில் இருந்தே நிதியத்தில் நிலையான முகாமைத்துவத்தினை மேற்கொண்டதன் மூலம் அரச நிறுவனத்தினதும் பகுதி அரசசேவை நிறுவனத்தினதும் ஊழியர்களின் நன்மைக்காக அவர்களின் கடன் தேவையை பூர்த்தி செய்வதற்கு செயற்படும் இந்த நிதியம் தற்போது நிதித் திட்டமிடல் அமைச்சின் கீழ் செயற்படும் பகுதி அரசசேவை நிறுவனமாக உருவாகியுள்ளது.

2012 ஆம் ஆண்டு நான் நிதியத்தின் நிர்வாகப் பொறுப்பினை ஏற்றுக் கொண்டபோது வீழ்ச்சியுற்றிருந்த உள்ளக நிர்வாகத்தினை ஒழுங்கு முறைப்படுத்தி நீண்டகாலமாக செயலற்றிருந்த கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கு விசேட செயற்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டதுடன், அதிலிருந்து சிறந்த விளைவொன்றை பெற்றுக்கொண்டமை இதுவரை பெற்றுக்கொண்ட விசேட வெற்றியாகும்.

அதிமேதகு ஜனாதிபதிஅவர்களின் மகிந்த சிந்தனையின் கீழ் அரசகொள்கைகளுக்கு அமைவாக நாட்டின் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் தொடர்பாக மக்களை அறிவூட்டும் முகமாக நடாத்தப்படும் தேசத்துக்கு மகுடம் கண்காட்சி நிகழ்ச்சித்திட்டத்திற்கு சமாந்தரமாக நடவடிக்கைகளை மேற்கொண்டதன் மூலம் நாட்டின் கஸ்டப் பிரதேசங்களில் உள்ள அரசசேவையாளர்களுக்கு கடன் வசதியினை வழங்குவதன் மூலம் நிதியத்தின் நோக்கத்தினை விரிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஜப்பான் முகாமைத்துவ நடைமுறைகளுக்கு அமைவாக 5எஸ் எண்ணக் கருவினை நிறுவனத்தின் நடவடிக்கைகளுக்கு முன்மாதிரியாக பிரயோகித்ததன் மூலம் பல தசாப்பத காலமாக சேர்ந்திருந்த கோவைகளை உரியமுறை பரீட்சித்தலின் பின்னர் அகற்றி நாளாந்த அலுவலக நடவடிக்கைகளை ஒழுங்கு முறையில் மற்றும் இலகுவில் பூர்த்தி செய்வதற்கான சூழலினை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அத்தோடு, ஊழியர் நலன்புரிச் சேவைகளை அதிகரித்ததன் மூலமும் ஊழியர் மற்றும் தொழில் வழங்குனர் எனும் இரு பகுதியினருக்குமிடையில் சிறந்த உள்ளக தனி நபர் தொடர்பினை பேணுவதன் மூலமும் நிறுவனத்தினுள் ஒத்துழைப்பினை அதிகரிப்பதன் மூலம் மூலமும் நிறுவனத்தின் இலக்கினை நோக்கிச் செல்வதற்கு முடிந்தமை நான் பெற்ற இன்னுமொரு வெற்றியாகும்.

அத்துடன் அரசமொழிக் கொள்கையை மதித்து நிறுவனத்தில் பயன்படுத்தப்படும் அனைத்து விண்ணப்பப் படிவங்கள், எழுத்தாவணங்கள் என்பவற்றை மும்மொழிகளில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அலுவலக ஊழியர்களை அதற்காக பயிற்றுவித்தல் காலத்தின் தேவையெனக் கருதி மேற்கொள்ளப்பட்ட இன்னுமோர் நடவடிக்கையாகும். மேற்குறித்த நோக்கத்தினை பூர்த்தி செய்வதற்கு உதவிய நிதியத்தின் தலைவி மற்றும் ஏனைய பொறுப்புக் குழு உறுப்பினர்கள்;, அலுவலக ஊழியர்கள் மற்றும் நிதிஅமைச்சு செயலாளர் உட்பட ஏனைய அலுவலர்கள் அனைவருக்கும் எனக்கு வழங்கிய ஒத்துழைப்புக்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



நிர்வாகப் பொறுப்பாளர்
டபில்யூ. நிமல் அபேசிறி
லோஹோர்சீமாட்டிகடன் நிதியம்

## தொலைநோக்கு

அரச சேவை ஊழியர்களுக்கு நிதி வசதிகளை வழங்கும் பிரதான நிறுவனமாக செயற்படுதல்.

## செயற்பணி

அரச ஊழியர்களை கடன் பழுவில் இருந்து விடுவித்து திருப்தியுடைய அரச சேவையை கட்டியெழுப்புவதற்கு பங்களிப்பு வழங்குதல்.

## குறிக்கோள்

அரச நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் என்பவற்றில் சேவையாற்றும் ஊழியர்களுக்கு சலுகை வட்டி வீதத்தில் இலகுவான நிபந்தனைகளின் கீழ் குறுகிய கால கடன்களை விரைவில் வழங்குவதன் மூலம் அவர்களை கடன் பழுவில் இருந்து விடுவிப்பதே இந்த நிறுவனத்தின் ஒரே குறிக்கோளாகும்.

## பணிகள்

- கடன் நிதியத்தினை நிலையாக பேணுவதன் மூலம் பயனாளிகளுக்கு கடன் வழங்குதல்.
- இந்த நிதியத்தின் மூலம் பயன்பெறும் அரச ஊழியர்களின் நன்மைக்காக நிறுவனத்தினை மேம்படுத்தல், மற்றும் இயலளவினை அதிகரித்தல்
- பயன்பெறுனர்களுக்கு கடன் வழங்குவதற்கு அவசியமான நிதியினைப் பெற்றுக் கொள்வதற்காக பொருத்தமான கொள்கைகளைத் தயாரித்தல்.
- கடன் முகாமைத்துவத்திற்காக பொருத்தமான முறைகளை மேம்படுத்துதல் மற்றும் கடன் வழங்கும் வசதிகளை மேம்படுத்துதல்.
- கடன் திட்டங்களைச் செயற்படுத்தல் ஏனைய அரச நிறுவனங்களில் ஊழியர்களுக்கு கடன் வழங்கும் பொழுது நிதியத்தின் வசதியளிப்பவராக செயற்படுதல்.

## 1. 2013 ஆம் ஆண்டு நிதியத்தின் செயற்பாடுகள்

1.1 2013ஆம் ஆண்டில் அரச, பகுதி அரச நிறுவனங்களில சேவையில் ஈடுபட்டிருந்த 5,005 ஊழியர்கள் இந் நிதியத்தின் பயனாளிகள் ஆகினர். அப்பயனாளிகள் வசித்த மாவட்டங்கட்கேற்ப வகுதிப்படுத்தப்பட்டுள்ள இரண்டாம் நிரலுக்கேற்ப 2012ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2013ஆம் ஆண்டில் தீவடங்கிலும் சகல மாவட்டங்களை அடக்கும் வண்ணம் பயனாளிகள் பயனடைந்துள்ளனர். 2012ஆம் ஆண்டு பயனாளிகளில் 75மூ அளவில் கொழும்பு மாவட்டத்தை சுற்றியுள்ள நிறுவகங்களில் சேவையாற்றுகின்றவர்களாகவும், 2013ஆம் ஆண்டில் ஏனைய மாவட்டங்களில் உள்ள ஊழியர்களிடையே கடன் கூடுதலாக அளிக்கப்பட்டும் உள்ளது. ஆண்டுதோறும் நடாத்தப்படும் தேசத்துக்கு மகுடம் நிகழ்ச்சித் திட்டத்தில் நிதியத்தால் செயற்படுத்தப்படும் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் பங்களிப்பு வழங்கப்பட்டது.

### அட்டவணை 01 – 2012 / 2013 ஆம் ஆண்டுகளில் கடன்பெற்ற அரச, பகுதி அரச நிறுவக உழியர் பயனாளிகள் மாவட்ட ரீதியாக

| மாவட்டம் | பயனாளிகள் தொகை | | | |
|---|---|---|---|---|
| | **2012** | **(%)** | **2013** | **(%)** |
| கொழும்பு | 3,245 | 74.45 | 711 | 14.20 |
| கம்பஹா | 288 | 6.60 | 677 | 13.52 |
| அனுராதபுரம் | 174 | 4.00 | 322 | 6.43 |
| கண்டி | 143 | 3.28 | 303 | 6.05 |
| வவுனியா | 77 | 1.78 | 25 | 0.50 |
| களுத்துறை | 64 | 1.47 | 416 | 8.32 |
| இரத்தினபுரி | 59 | 1.35 | 172 | 3.43 |
| காலி | 55 | 1.25 | 287 | 5.73 |
| குருநாகல் | 46 | 1.10 | 428 | 8.55 |
| புத்தளம் | 44 | 1.00 | 53 | 1.06 |
| யாழ்ப்பாணம் | 43 | 1.00 | 02 | 0.04 |
| பொலொன்னறுவை | 24 | 0.55 | 271 | 5.42 |
| திருகோணமலை | 20 | 0.46 | 211 | 4.22 |
| முல்லைத்தீவு | 15 | 0.34 | 04 | 0.08 |
| மன்னார் | 10 | 0.23 | 08 | 0.16 |
| பதுளை | 10 | 0.23 | 145 | 2.90 |
| மாத்தளை | 09 | 0.20 | 123 | 2.45 |
| ஹம்பாந்தோட்டை | 07 | 0.15 | 90 | 1.80 |
| கேகாலை | 06 | 0.14 | 191 | 3.82 |
| மட்டக்களப்பு | 05 | 0.11 | 41 | 0.82 |
| அம்பாறை | 05 | 0.11 | 228 | 4.55 |
| மொனராகலை | 04 | 0.10 | 122 | 2.44 |
| நுவரேலியா | 03 | 0.06 | 66 | 1.33 |
| மாத்தறை | 02 | 0.04 | 109 | 2.18 |
| **மொத்தம்** | **4,358** | | **5,005** | |

## பதவிக்கேற்ப பயனாளிகள்
## அட்டவணை 02 - 2012 / 2013 அரச சேவை

| பதவி | பயன்பெற்றவர்களின் எண்ணிக்கை | |
|---|---|---|
| | 2012 | 2013 |
| இராணுவ சிப்பந்திகள் | 503 | 983 |
| பொலிஸ் கொன்ஸ்தபில் | 545 | 590 |
| போலிஸ் சார்ஜன் | 389 | 216 |
| சாதாரண தொழிலாளி | 459 | 514 |
| அலுவலக பணி உதவியாளர் | 324 | 330 |
| முகாமைத்துவ உதவியாளர் | 329 | 375 |
| கோப்ரல் | 916 | 1207 |
| சாரதி | 168 | 145 |
| பொலிஸ் பரிசோதகர் | 46 | 46 |
| உப பொலிஸ் பரிசோதகர் | 53 | 31 |
| சமையல்காரர் | 41 | 57 |
| பொலிஸ் பாதுகாப்பு உதவியாளர் | 16 | 11 |
| அளவை உதவியாளர் | 101 | 28 |
| சிறைச்சாலை காவலாளி | 28 | 46 |
| உணவுச்சாலை ஊழியர் | 19 | 24 |
| அபிவிருத்தி உதவியாளர் | 18 | 38 |
| கவனிப்பாளர் | 20 | 04 |
| காவலாளி | 27 | 18 |
| மோட்டர் திருத்துனர் | 10 | 02 |
| பொலிஸ் சிவில் உதவியாளர் | 13 | 02 |
| தொழில்நுட்பவியலாளர் | 12 | 15 |
| தச்சுத்தொழில் அலுவலர் | 22 | 07 |
| சுகாதார நிர்வாகி | 08 | 05 |
| மேஜர் | 23 | 18 |
| மனித வள உதவியாளர் | 08 | 04 |
| தீயணைப்பாளர் | 08 | 02 |
| நிர்வாக அலுவலர் | 05 | 11 |
| மேசன் | 12 | 09 |
| கணக்காளர் | 11 | 09 |
| லெப்டினன் | 33 | 60 |
| களஞ்சிய உதவுனர் | 06 | 07 |
| மின் உதவியாளர் | 13 | 07 |
| துவிச்சக்கர தூதேவலர் | 19 | 02 |
| ஒவசியர் | 08 | 02 |
| தபால் அலுவலர் | 30 | 13 |
| உதவிப் பணிப்பாளர் | 11 | 05 |
| வரவேற்பாளர் | 02 | 02 |
| புத்தகம் கட்டுனர் | 13 | 02 |
| கிராம அலுவலர் | 08 | 29 |
| நிகழ்ச்சித்திட்ட உதவுனர் | 16 | 31 |
| ஏனையவை | 65 | 98 |
| **மொத்தம்** | **4358** | **5005** |

## 1.2 கடன் விநியோகப் படிமுறையும் முன்னேற்றமும்

கீழ்க் குறித்த தகைமைகளை பூர்த்தி செய்த அரச, பகுதி அரச நிறுவன ஊழியர் இந் நிறுவகத்திற்கு கடனுக்காக விண்ணப்பிக்கலாம்.

- ஒய்வூதியமுள்ள அரச சேவையில் குறைந்தபட்சம் 03 வருட நிரந்தர சேவைக் காலத்தைக் கொண்ட அரச ஊழியராக இருத்தல் அல்லது ஒய்வூதியம் அல்லாததும் பகுதி அரச நிறுவனம் எனில் குறைந்தபட்சம் 05 வருட நிரந்தர சேவைக்காலத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

- ஒய்வு பெறும் வயதிற்கு முன்னர் வழங்கும் கடனை மீளப்பெற்றுக்கொள்வதற்கு போதியளவு சேவைக் காலத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

- விண்ணப்பதாரர் மேற்குறித்த தகைமையுடைய இரு பிணையாளர்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

- பகுதி அரச சேவை எனில் பிணையாளர்களில் ஒருவர் குறைந்தபட்சம் 03 வருட நிரந்தர சேவைக்காலத்தையும் ஒய்வூதியத்தையும் கொண்ட அரச சேவையாளராக இருத்தல் வேண்டும்.

- இந்த இருபாலாரும் விண்ணப்பதாரியின் மாதாந்த சம்பளத்தின் 40% எல்லையினுள் கடன் தவணையை கழிப்பதற்கான தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

மேற்குறித்த மூலப்பிரமாணங்களுக்கேற்ப தகைமை உள்ள விண்ணப்பதாரிகளின் கடன் படிமுறையினதும் கடன் விநியோகத்தினதும் முன்னேற்றம் பின்வருமாறு

### அட்டவணை 02 - 2013 கடன் விநியோக படிமுறை

| மாதம் | விநியோகிக்கப்பட்ட கடன் விண்ணபப்பப்படிவங்கள எண்ணிக்கை | தகைமையுடைய கடன் பயனாளிகள் எண்ணிக்கை | வழங்கப்பட்ட கடன் எண்ணிக்கை | கடன் பெறுமதி (ரூ) (000) |
|---|---|---|---|---|
| ஜனவரி | 605 | 293 | 354 | 13,680 |
| பெப்ரவரி | 700 | 318 | 305 | 11,845 |
| மார்ச் | 670 | 418 | 396 | 15,230 |
| ஏப்பிரல் | 580 | 286 | 310 | 11,730 |
| மே | 847 | 371 | 370 | 14,245 |
| ஜூன் | 816 | 392 | 527 | 20,555 |
| ஜூலை | 1020 | 510 | 502 | 19,565 |
| ஓகஸ்ட் | 840 | 497 | 536 | 20,650 |
| செப்டெம்பர் | 822 | 486 | 440 | 17,060 |
| ஒக்டோபர் | 874 | 512 | 490 | 19,235 |
| நவம்பர் | 872 | 514 | 406 | 15,805 |
| டிசெம்பர் | 782 | 488 | 369 | 14,440 |
| **மொத்தம்** | **9,428** | **5,085** | **5,005** | **194,040** |

## 1.3 விநியோகிக்கப்பட்ட கடன் எல்லைகளும் கடன்களின் பெறுமதியும்

2013 ஆண்டு சனவரி முதல் டிசெம்பர் வரை, உச்ச கடன் எல்லைக்கு உட்பட்டு அளிக்கப்பட்ட முழுக் கடன் பெறுமதி கீழே காட்டப்பட்டுள்ளது. அதற்கேற்ப இவ்வாண்டில் 5005 அரச சேவை பயனாளிகட்கு 194 மில்லியன் ரூபா 11.5 வட்டியில் அளிக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டில் பயனாளிகட்கு ஆகக்கூடிய தொகையாக 40,000 ரூபாவையே நிதியத்தால் அளிக்க முடித்தது. அவசர தேவைகள் ஏற்படுமிடத்து சிறு தரங்களிலுள்ள பயனாளிகட்கு நிதியத்தில் இருந்து அளிக்கப்படும் ஆகக் குறைந்த கடன் தொகையான 10,000Æ® ரூபாவும் தொடர்ந்து அளிக்கப்பட்டது.

### அட்டவணை 03 – கடன் உச்ச எல்லையும் கடன் தொகைப் பெறுமதியும்

| உச்சக் கடன் எல்லை | (ரூபா) வழங்கிய கடன்களின் | எண்ணிக்கை கடன் வினியோக பெறுமதி |
|---|---|---|
| 40,000 | 4,622 | 184.88 |
| 30,000 | 198 | 5.94 |
| 20,000 | 119 | 2.38 |
| 15,000 | 36 | 0.54 |
| 10,000 | 30 | 0.30 |
| **மொத்தம்** | **5,005** | **194.04** |

## 1.4 கடன் அறவீட்டு முன்னேற்றம்

2010 – 2013 காலவெல்லையில் கடன் விநியோகம், கடன் அறவீடு பற்றிய முன்னேற்றம் 05 ஆம் அட்டவணையிலும் 01 ஆம் வரைபடத்திலும் காட்டப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டு கடன் அறவீட்டு முன்னேற்றத்துடன் ஒப்பிடும் போது, 2013 ஆம் ஆண்டில் 5.5% முன்னேற்றம் காணப்பட்டுள்ளது.

### அட்டவணை 04 – 2010 – 2013 கடன் விநியோகமும் கடன் அறவீடும்

| ஆண்டு | வழங்கிய கடன் தொகை | வினியோகித்த கடன் (ரூ 000) | அறவிட்ட கடன் (ரூ 000) |
|---|---|---|---|
| 2010 | 5,943 | 170,065 | 211,855 |
| 2011 | 4,791 | 193,645 | 215,221 |
| 2012 | 4,358 | 173,970 | 228,064 |
| 2013 | 5,005 | 194,040 | 240,604 |

**வரைபடம் 01**



## 1.5 செயற்படாத கடன் கணக்குகளின் முகாமைத்துவம்

அரச முயற்சிகள் மீதான குழுவின் பணிப்புரைகளைக் கடைப்பிடித்து 2011, 2013 ஆம் ஆண்டுகளில் பல தசாப்தங்களாக அறவிடப்படாது. திரண்டிருந்த கடன்களை அறவிடுவதற்கான விசேட முயற்சிகளை நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை முன்னெடுத்தது. அறவிடப் படாத இக் கடன்களுக்கு விசேட கவனம் செலுத்திய நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை இவ்விடயத்திற்கென விசேட குழுவொன்றை நியமித்து அக்குழுவின் முன்னேற்றத்தை மிக உன்னிப்பாக கண்காணித்தது. அதேவேளை இயன்றளவு அறவிடப்படாத கடன்களை அறவிடுவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டதுடன், அறவிட முடியாத கடன்களை அறிவிடுவதற்கு சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுக்கும் சாத்தியக் கூறுகளை ஆராய்வதற்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டன. வெற்றிகரமான இக் கடன் அறவீட்டு நடவடிக்கையால் அறவிடப்படாதிருந்த 8 மில்லியன் ரூபா கடன்கள் 2012, 2013 ஆம் ஆண்டுகளில் அறவிடப்பட்டன.

### அட்டவணை 05 செயற்படாத கடன்கள் அறவீட்டின் முன்னேற்றம் - 2012 -2013

| மாதம் | அறவீடு (ரூபா) | |
|---|---|---|
| | **2012** | **2013** |
| ஜனவரி | 342,173 | 282,129 |
| பெப்ரவரி | 242,125 | 340,048 |
| மார்ச் | 226,216 | 254.035 |
| ஏப்பிரல் | 200,558 | 277,117 |
| மே | 350,829 | 397,218 |
| ஜூன் | 469.817 | 368,201 |
| ஜூலை | 571,007 | 300,223 |
| ஓகஸ்ட் | 377,813 | 415,693 |
| செப்டெம்பர் | 235,859 | 298,129 |
| ஓக்டோபர் | 437,927 | 230,941 |
| நவம்பர் | 337,417 | 314,079 |
| டிசெம்பர் | 256,456 | 375,300 |
| **மொத்தம்** | **4,048,197** | **3,853,113** |

### 1.5.1 2005 ஆம் ஆண்டு வரை செயற்படாத கடன் கோப்புக்கள்

அறவிடப்படாத 1227 கடன் கணக்குகள் மந்தகதியில் இருப்பதையும் அவை இன்னமும் 2013 ஆம் ஆண்டில் ஐந்தொகைக்குள் சேர்க்கப்படாது இருப்பதையும் அவதானித்த, அறவிடப்படாத கடன்களை அறவிடுதல் தொடர்பான விசேடகுழு பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொண்டது.

- அறவிடமுடியாத கடன்களை அறவிடுதற்கும் ஆண்டு தோறும் அவற்றிற்கான கணக்கீட்டிற்கும் வட்டியை கணக்கிடுவதற்கும் முறையான பொறிமுறையொன்று இன்மையால், விநியோகிக்கப்பட்ட கடன்கள், கணணியில் சேர்க்கப்பட்டுள்ள கடன் மீதிகளைக் காட்டிலும் மிகக் கூடுதலாக இருத்தல் கூடும்.

- இக் கணக்குகளில் வழங்கப்பட்ட கடன்களுக்கு மேலதிக தவணைக் கட்டணங்கள் அறவிடப்பட்ட 504 கணக்குகளில் செயற்படாத தினத்தன்று மீதி ரூ 1,546,087/27 ஆகும். ஆயினும் இத்தொகை காலத்திற்குக் காலம் செலுத்தப்பட்டு வந்திருப்பதால் ஒழுங்கற்ற முறையின் அறவீட்டினால் அத்தொகை முற்றாக வட்டியுடன் செலுத்தப்பட்டு இலாபம் 50% வீத வட்டிக்கு மேலதிகமாக நிறுவகத்திற்கு கிடைத்திருக்கிறது. கணனி முறைமைக்கேற்ப அதன் பெறுமதி 16,226,259.43 அதிகரித்து கணனி முறைமையில் காட்டப்படும் கணக்கு மீதியை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

- சீமாட்டி லோஹோர் நிலையம் உரிய பயனாளி நிறுவகங்களிடமிருந்து சில வேளைகளில் தவணைக் கட்டணங்களுடன் ஒரு சிறு தொகைகளை கூடுதலாக பெற்ற போது அதனை நிதியத்தின் கணக்கில் திரளவிட்டது. நிதியத்திற்கான இந்த கூடுதலான கொடுப்பனவை எதிர்காலத்தில் கட்டுப்படுத்துவதற்கு அது முடிவெடுத்துள்ளது. அப்படிக்கிடைத்த பணத்தை உரிய பயனாளிகட்கு மீளளிப்பதற்கும் இயன்றளவு முயற்சி செய்து வருகிறது. 2011, 2013 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற பொது முயற்சிகள் குழுவின் விதப்புரைப்படி, இவ்வாறு திரண்ட மேலதிக அறவீடு 7,835, 613 / ரூபா எனவும் பல ஆண்டுகளாக இதன் உரித்தாளர்கள் இதனை கோராததால் பொது நிதியத்தின் வருவாய்க் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டுள்ளது.
- **தொங்கற் கணக்கு** - மீதி நீண்டகாலமாக நிதியத்தின் கணக்குகளிற் பேணப்பட்டுவருகிறது. 2005 ஆம் ஆண்டுவரை பேணப்பட்டு வந்த இக் கணக்கின் மீதி ரூ 1,240,113/23 வருவாய்க் கணக்கில் காடடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதேவேளை 2006 முதல் நாளது வரையாக இம் மீதியை முன் கொண்டு வருவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## 1.5.2. நிதியத்தின் பொறுப்புக்கள்

### i. ஈட்டின் (காணி உறுதிகள்) மீதான கணக்குகள்

ஆரம்பத்தில் கடன் அளிப்பதற்காக சொத்துக்களை, விசேடமாக காணிகளை ஈடுவைக்கும் முறையிருந்தது. 1960 ஆம் ஆண்டு முதல், 267 உறுதிகள் இந் நிறுவகத்தின் பொறுப்பாயிருந்து இம் முறை தற்போது கைவிடப்பட்டு அத்தகைய ஆவணங்களை, விசேட கணக்காய்வுக் குழுவொன்று உறுதிப்படுத்திய பின்னர், உரித்தாளர்களிடம் கையளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப கணக்காய்வுக் குழுவின் விதப்புரைப்படி 142 உறுதிகள் சட்டபூர்வ உரித்தாளர்களிடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதில் 04 உறுதிகள் வழங்கப்பட்டு; 31-12-2013 அன்றுள்ளவாறாக உறுதியாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

### அட்டவணை - 06 நிதியத்திடம் உள்ள பிணை உறுதிகள்

| விவரணம் | உறுதிகள் எண்ணிக்கை |
|---|---|
| மொத்த உறுதி எண்ணிக்கை | 267 |
| விடுவிப்பதற்கு அனுமதிக்கப்பட்டவை | 142 |
| மேலும் வைத்திருக்க வேண்டிய உறுதிகள் | 91 |
| தீர்க்கப்படவேண்டிய உறுதிகள் | 30 |
| விடுவிக்கப்பட்டவை | 4 |

### ii. உயிர் காப்புறுதி

1949 முதல் 1987 வரையான காலவெல்லையில் ஈட்டுக்கு உயிர்க் காப்புறுதியை நிதியம் வழங்கியது. வழக்கிழந்த ஆவணங்களை அகற்றும் செய்திட்ட செயற்பாட்டின் போது இது தொடர்பான ஆவணங்களை ஆவணக் காப்பகத்தில் காணக் கூடியதாயிருந்தது. அதற்கேற்ப நிதியை விடுவிப்பதற்காக 319 உறுதிகள் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டன. இருப்பினும் இது பலனளிக்கவில்லை. ஏனென்றால் இதன் செல்லுபடிக் காலம் காலாவதியாகி விட்டதுடன் கூட்டுத்தாபனத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களும் அழிக்கப்பட்டுவிட்டன. எனவே பின்வரும் ஆவணங்கள் ஆவணக் காப்பகத்தில் உள்ளன.

- 216 இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் காப்புறுதி உறுதிகள்
- 103 இதர காப்புறுதிக் கூட்டுத்தாபனங்களின் காப்புறுதி உறுதிகள்

## 1.6 லோஹோர் சீமாட்டி கடன் நிதியத்திற்குரிய அலுவலகத் கட்டடத் தொகுதி

### 1.6.1 வாடகை வருமானம்

லோஹோர் சீமாட்டி கடன் நிதியக் கட்டடத்தொகுதியின் 5500 சதுர அடியை உபயோகித்துஇ இந்தக் கட்டடத்தில் மீதியாக உள்ள இடத்தை கீழ்வரும் நிறுவனங்களுக்கு வாடகைக்கு விட்டு வாடகை வருமானமாக ரூபா 14.4 மில்லியன் ஈட்டப்பட்டது.

**அட்டவணை 07 – 2013 ஆண்டின் கட்டட வாடகை வருமானம்**

| தொடர் இல. | நிறுவனம் | வாடகைக்கு விடப்பட்டுள்ள மாடி | சதுர அடி அளவு | வருமானம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | சீமாட்டி லோஹோர் கடன் நிதியம் | 3ஆம் மாடி - கீழ்தளம் | 5,500 | - |
| 02 | லேக்ஹவுஸ் புத்தக நிலையம் | தரைத் தளமும் அடித்; தளமும் | 10,790 | 5,875,000 |
| 03 | கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு | 1ம் தளம் | 2,415 | 1,753,590 |
| 04 | இலங்கை கஹட்டகஹ காரீயக் கம்பனி | 1ம் தளம் | 2,750 | 1,986,600 |
| 05 | இலங்கை மின்சார சபை | 2ம் தளம் | 4,700 | 3,776,548 |
| 06 | இலங்கை தொழில்முயற்சி சீர்திருத்த ஆணைக்குழு | 2ம் தளாம் | 840 | 840,000 |
| 07 | AJS அசோசியேட் நிறுவனம் | இலக்கம் 100/20 | 380 | 184,500 |
| | மொத்தம் | | **27,375** | **14,416,238** |

### 1.6.2 நிதியத்தின் ஸ்தீரத்தன்மை

நிதியத்தின் தொழிற்பாடு மற்றும் நிதியின் ஸ்திரத்தன்மையை பேணுவது தொடர்பாக பொறுப்புக் குழு தன் கவனத்தை செலுத்தியுள்ளது. இந்த நிறுவனம் திறைசேரியில் தங்கியில்லாததினால், ஊழியர் சம்பளம் உட்பட அனைத்து செலவுகளும் இந்த வட்டி வருமானத்தில் இருந்து மேற்கொள்ளப்படல் வேண்டும். வட்டி வருமானத்தில் இருந்து தொழிற்பாட்டு செலவுகள் மேற்கொள்ளப்படுவதுடன், ஏனைய நிர்வாகச் செலவுகள் மற்றும் கடன் மீளப்பெற்றுக்கொள்வதற்கான ஏனைய அனைத்துச் செலவுகளும் இந்த வருமானத்தினுள் மேற்கொள்ளப்படுவதுடன் நிதியின் மிகுதி மக்கள் வங்கியில் கீழவருமாறு மூதலீடு செய்யப்படுகின்றது.

**அட்டவணை 08 – முதலீடு**

| முதலீட்டு வகை | வங்கி | 2012/12/31ம் திகதியில் (ரூ) | 2013/12/31ம் திகதியில் (ரூ) |
|---|---|---|---|
| நிலையான வைப்பு | மக்கள் வங்கி | 751,871 | 71,842,646 |
| திறைசேரி உண்டியல் | "" | 7,200,900 | 12,416,639 |
| குறுகிய கால முதலீடு | "" | 66,434,649 | 15,360,453 |
| **மொத்தம்** | | **74,387,420** | **99,619,738** |

### 1.6.3 தொழிற்பாட்டு வருமானம்

2013ஆம் ஆண்டினுள் மொத்த தொழிற்பாட்டு வருமானம் ரூபா 76.3 மில்லியனாகும் இதில் தொழிற்பாட்டு மேலதிகம் 28.6 மில்லியன் ஆகும். 2012ஆம் ஆண்டோடு ஒப்பிடுகையில் 7.1 அதிகரிப்பு ஆகும்.

**வரைபடம் - 02 தொழிற்பாட்டு மிகைநிதி 2010 – 2013**




### 1.7 வசதியளிப்பவராக (குயஉடைவையவழச) நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

காணி சீர்திருத்த ஆணைக்குழு மற்றும் தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை ஊழியர்களுக்காக அந்த நிறுவனத்தின் நிதியினை உபயோகித்து கடன்களை வழங்கும் வசதியளிப்பாராக தொழிற்படுவதுடன், 2013 ஆம் ஆண்டு அந்த சேவையின் கீழ் அந்த நிறுவனத்தின் நிதியினைப் பயன்படுத்தி வழங்கிய கடன் தொகை பற்றிய விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 09 – கடன் வசதியளிப்பவராக (குயஉடைவையவழச) நடவடிக்கைகளை மேற்கொள்ளல்**

| நிறுவனம் | வழங்கிய கடன் தொகை | வழங்கிய கடன் பெறுமதி (ரூ) |
|---|---|---|
| காணி சீர்திருத்த ஆணைக்குழு | 09 | 90,000 |
| தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை | 25 | 1,230,000 |
| **மொத்தம்** | **34** | **1,320,000** |

### 1.8 தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சித்திட்டம் – 2013

அரச கொள்கைக்கு அமைவாக நாட்டின் அபிவிருத்திக்கு நிதியம் பங்களிப்பு நல்கியுள்ளது. நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக மக்களை அறிவூட்டும் முகமாக ஆண்டுதோறும் நடாத்தப்படும் தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்து பணியாற்றி இந்த நிதியத்தின் நன்மைகள் தூர பிரசேதங்களிலுள்ள அரச பணியாளர்கள் பலருக்கு கிடைக்க வேண்டும் எனும்; நோக்கத்துடன் பணியாற்றியதின் விளைவாக 2013ஆம் ஆண்டில் கிழக்கு மாகாணத்தில் நடாத்தப்பட்ட விசேட நிகழ்ச்சித் திட்டத்தின் பலனாக அந்தப்பிரதேசத்தின் 438 அரச அலுவலர்களுக்கு 17.27 மில்லியன் கடன் தொகை வழங்கப்பட்டது.

**அட்டவணை 10 - தேசத்திற்கு மகுடம் நடாத்தப்பட்ட மாவட்டங்களில் கடன் பயனாளிகள் எண்ணிக்கை**

| மாவட்டம் | பயனாளிகள் தொகை | பெறுமதி (மில். ரூபா) |
|---|---|---|
| பொலன்னறுவை | 94 | 3,71 |
| திருகோணமலை | 167 | 6,61 |
| மட்டக்களப்பு | 120 | 4,69 |
| அம்பாறை | 57 | 2,26 |
| **மொத்தம்** | **438** | **17,27** |

## 02. நிதியத்தின் பின்புலம்

இந்த நாட்டில் வசித்த ஸ்கொட்லண்ட் நாட்டைச் சேர்ந்த ஜீன் லோஹோர் சீமாட்டியினால் கடன் நிதியினைக் கட்டியெழுப்புவதற்கு அவசியமான ஆரம்ப மூலதனமாக 300 பவுண் நிதி நன்கொடையாக வழங்கப்பட்டது. அக்காலத்தின் தர்ம ஆணையாளராக இருந்த அருட்தந்தை நதானியல் நிதியத்தினை ஆரம்பிக்கும் பணிகளில் முன்னின்று செயற்பட்டதுடன், 1927 மார்ச் 26ஆம் திகதி லோஹோர் சீமாட்டி கடன் நிதியம் எனும் பெயரில் ஆரம்பிக்கப்பட்டது.

அன்றிலிருந்து இந்த நிதியம் பயனாளிகளுக்கு கடன் வழங்குதல் மற்றும் அவற்றினை மீள அறவிடுதல் நடவடிக்கைகள் மூலம் சுழற்சி நிதியமாக செயற்படுகின்றது. அரச சேவையைப் போன்று வியாபார நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களும் தங்களது குறுகிய கால நிதித் தேவையினை பூர்த்தி செய்வதற்கு நிலவும் வங்கி முறையானது துணைபுரியாததனால் அதிக வட்டியில் கடன் வழங்கும் தனிநபர்களிடம் கடன்களைப் பெற்றுக்கொள்வதற்கு பழகியுள்ளனர். இதன் காரணமாக அரச சேவையாளர்களும் தனியார் துறையைச் சேர்ந்த ஊழியர்களும் கடன் சுமையினால் கஸ்டப்படுகின்றனர். இவ்வாறான சூழலில் லோஹோர் சீமாட்டி கடன் நிதியம் நிறுவப்பட்டதன் பின்னர் இந்த ஊழியர்களுக்கு கடன் பெற்றுக்கொள்வதானது மிகப்பெரிய வரப்பிரசாதமாக அமைந்தது.

1957ஆம் ஆண்டு இந்தச் சட்டம் நியதிச்சட்டமாக்கப்பட்டு நிதியத்திற்கு அரசினால் மற்றம் வேறு நன்கொடைகள் மூலம் கிடைக்கப்பெற்ற உதவிகள் மூலம் இந்த நிறுவனத்திற்குரிய இரண்டு மாடி கட்டடம் கட்டப்பட்டது.

## 2.1 நம்பிக்கை பொறுப்புச் சபை

பொறுப்புச் சபையானது அரச மற்றும் தனியார் பிரிவுகளின் பிரதிநிதிகளை உள்ளடக்கியதாகும். இந்த நிறுவனத்தின் காப்பாளர் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சராவதுடன், அவரால் நம்பிக்கைப் பொறுப்புச் சபைக்கான உறுப்பினர்கள் நியமிக்கப்படுகின்றார்கள். அவர்களில் ஒருவர் நிதியத்தின் நிர்வாகத்திற்கு அவசியமான பொறுப்புச் சபையினால் வழங்கப்படும் கட்டளைகளை செயற்படுத்துவதற்கு நிர்வாகப் பொறுப்பாளர் சட்டத்தின் 10 மற்றும் 11ஆம் பந்திகளில் குறித்துரைத்துள்ளவாறு, நம்பிக்கை பொறுப்புச் சபைக்கு நியமிக்கப்பட்டவர்களில் இருந்து நியமிக்கப்படுவார். அந்தச் சட்டத்தின் 3.2ஆம் பந்திக்கு அமைவாக நம்பிக்கைப் பொறுப்புச் சபையின் தலைவர் பதவி திறைசேரி பிரதிநிதியால் வகிக்கப்படும்.

## 2.2 அட்டவணை 11 - 2013 ஆம் ஆண்டில் நிதியத்தின் பதவியணி

| தொடர் இல. | அனுமதி வழங்கப்பட்ட பதவி | அனுமதி வழங்கப்பட்ட பதவியணி | உண்மையில் பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| **1** | கணக்காளர் | 01 | 01 |
| **2** | நிர்வாக அலுவலர் | 01 | 01 |
| **3** | கணக்கு அலுவலர் | 01 | 01 |
| **4** | உள்ளகக் கணக்காய்வு அலுவலர் | 01 | - |
| **5** | முகாமைத்துவ உதவியாளர் | 35 | 33 |
| **6** | சாரதி | 02 | 02 |
| **7** | அலுவலக உதவியாளர் | 05 | 05 |
| **8** | கட்டடப் பராமரிப்பு உதவியாளர் | 01 | 01 |
| | **மொத்தம்** | **47** | **44** |

## 2.3 நிர்வாகக் கட்டமைப்பு




**03. பொது நிர்வாகமும் மனிதவள அபிவிருத்தியும்**

## 3.1 புதிய ஆட்சேர்ப்புகள்

வெற்றிடங்கள் நிலவிய கீழ்க்காணும் பதவிகளுக்காக புதிய அலுவலர்களுக்கான ஆட்சேர்பு மேற்கொள்ளப்பட்டது.

- III ஆந் தரத்திற்கான முகாமைத்துவ உதவியாளர் பதவி 04
- சாரதி பதவி 01
- அலுவலக பணி உதவியாளர் 01

## 3.2 பதவி உயர்வுகள்

5 அலுவலர்கள் 1ம் தர முகாமைத்துவ உதவியாளர் பதவிகட்கும் ஒரு அலுவலர் 1ம் தர கனிட்ட முகாமைத்துவப் பதவிக்கும் பதவி உயர்த்தப்பட்டனர்.

## 3.3. அலுவலகப் பணியாளர்களின் நலன்புரிச் சேவைகள்/நட்புறவுச் சுற்றுலாக்கள்

நிறுவனத்தின் நோக்கம் மற்றும் இலக்கு என்பவற்றினை பூர்த்திசெய்வதற்கு இதன் வாடிக்கையாளர்களுக்கு உச்சளவான சேவையை வழங்குவதற்கு வருடம் முழுவதிலும் அர்ப்பணிப்புடன் பணிபுரிந்த பணியாளர்களினுள் நட்புறவை வளர்க்கவும், பல்வேறு மட்டத்திலான அலுவலர்களுக்குள் உள்ளக சேவையாளர் தொடர்பை மேம்படுத்தவும் மற்றும் உல்லாச பொழுதுபோக்குவதற்கு உதவுவதன் மூலம் அலுவலகப் பணியாளர்களின் செயற்திறனை அதிகரிப்பதற்காகவும் 2013 ஆம் ஆண்டில் டிசம்பர் 14, 15, 16 ஆம் திகதிகளில் நட்புறவுச் சுற்றுலாவொன்று பொலனறுவை புனித நகர், பாசிக்குடா கடற்கரை, கோணேஸ்வரம் கோவில், கிண்ணியா சுடுநீர்க் கிணறு ஆகியவற்றிற்கு மேற்கொள்ளப்பட்டது. இதில் 40 பணியாளர் பங்குபற்றினர்.

## 3.4 பணியாளர்கள்

- 2011ஆம் ஆண்டு முதல் பணியாளர்கட்கு 100இ000ஃஸ்ரீ ரூபாவுக்கு கீழ் வழங்கப்பட்;ட இடுக்கண் கடனை, 2012ஆம் ஆண்டில் கடன் பெறாத 12 பேருக்கு பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அங்ஙனமே கடன் தொகையை 10 மாத சம்பள அடிப்படையில் 250,000/= ரூபாவாக உயர்த்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.
- விழா முற்பணத்தை 5000/= ரூபாவிலிருந்து 10,000/= ரூபா வரை வரை உயர்த்தி சகல ஊழியர்கட்கும் வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- 2013 ஆம் ஆண்டு சிங்கள, இந்து புத்தாண்டின் பொருட்டு 5000ஃஸ்ரீ ரூபா பெறுமதியான வவுச்சரை கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் மூலம் ஊழியர்கட்கு பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.
- 6000/= ரூபா வீதம் ஊழியர்களின் கோரிக்கைகளின் பேரில் மிதிவண்டிக்கான கடன்கள் 06 பேருக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 3.5 நிதியத்தின் கணனி முறைமையை மேம்படுத்தல்

அமைச்சின் பிரதிநிதிகள் நால்வர் அடங்கிய செயற்குழுவொன்றின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட செய்திட்ட மதிப்பீட்டின் பின்னர் அளிக்கப்பட்ட அறிவுறுத்துரைகளின்படி நிதியத்திற்கு உகந்த மென்பொருள முறைமையை நிர்மாணிப்பதற்கு அடிப்படையான மென்பொருளுக்குத் தேவையான விவரக்கூற்றுகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப இப்பணி மொறட்டுவை பல்கலைக்கழக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்;பட்ட பின்னர் பல கட்ட படிமுறைகளின் பின்னர் விவரக்கூற்றுகள் தயாரிக்கும் பணி பூர்த்தியாகியுள்ளது.

## 3.6 உபயோகிக்கமுடியாத கழிக்கப்பட்ட பொருட்களைக் கைதவிர்த்தல்;

பொருட்கள் கணிப்பாய்வு அறிக்கைப்படி உபயோகிக்கமுடியாது பாவனையிலிருந்து அகற்றப்பட்ட கழிக்கப்பட்ட பொருட்கள் (கதிரைகள, மேசைகள், கணனிகள், மின் விசிறிகள் முதலியன) அரச தேடி வழங்கும் படிமுறையைக் கடைப்பிடித்து முறையான செயற்குழுவின் மூலம கூறுவிலைகளை மதிப்பீடு செய்து 60,800/= ரூபாவிற்கு ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

## 3.7 பதிவுக் காப்பகத்தை நவீனமயப்படுத்தல்

பதிவுக் காப்பகத்தில் பல தசாப்தங்களாக கோப்புகள் தேங்கிக் கிடப்பதால் பின்வரும் வழிமுறைகளைக் கையாண்டு பதிவுக்காப்பகத்தை நவீனமயப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- காலங்கடந்த கோப்புகள், கடன் செலுத்தப்பட்டாயிற்றென கணக்காய்வில் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை அனுமதியுடன் கைதவிர்த்தமை.
- தேடிவழங்கும் படிமுறையைக் கையாண்டு 7.7 தொன் நிறையுடைய கடதாசி 30,796/= ரூபாவிற்கு வாழைச்சேனை காகித கூட்டுத்தாபனத்திற்கு அனுப்புவதற்கான நடவடிக்கை மேற்கொண்டமை.
- பதிவுக்காப்பகத்தை நவீனமயப்படுத்தல்.
- மேலும் பாதுகாக்க வேண்டிய கோப்புகளை பாதுகாப்பாக களஞ்சியத்திட்டமை (செயற்படாத பிணை, காப்புறுதி).
- கோப்புகளை அடையாளம் காணவும் இலகுவாக கணனிப்படுத்தவும் குறியீட்டு முறையொன்றை அறிமுகப்;படுத்தியமை.

### 3.8 கட்டடம், வளவுகளை மேற்பார்த்தல்

லோNஉறார் சீமாட்டி கடன் நிதியத்திற்குச் சொந்தமான கட்டடங்களை காலத்திற்கேற்றவாறு நவீனமயப்படுத்த வேண்டும். அதற்கேற்ப குறைபாடுகள் ஆராயப்பட்டு துப்புரவற்ற பொருட்களை கைதவிர்ப்பதற்கான முறைகளை ஆயத்தஞ் செய்வதற்காக ஒப்பந்தகாரரொருவர் மூலம் 2,367,920/= ரூபா செலவிடப்பட்டது.

### 3.9 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

